දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

මගේ අංකය )
எனது இல ) CF/EXO/12/2020
My No.

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி ) 2020.12. 01
Date )

සුවසිරිපාය
சுவசிரிபாய
**SUWASIRIPAYA**

**සෞඛ්‍ය අමාත්‍යාංශය**
**சுகாதார அமைச்சு**
**Ministry of Health**

பொதுசுற்றுநிருப இலக்கம் : 02 - 97 /2020

மாகாண சுகாதார செயலாளர்கள்

பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கை தேசிய வைத்தியசாலை

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்

மத்திய அமைச்சின் கீழ் உள்ள அனைத்து வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,

பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்

உரிய திணைக்களத் தலைவர்களும்

**சுகாதார அமைச்சின் ஆரம்ப தொழிநுட்ப சேவை வகை தரம் II PL - 03 - 2006 (ஏ) சம்பள அளவுக்கு உரித்தான சுகாதார சாரதி பதவிக்கான இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2020 (இரண்டாவது தடவை)**

சுகாதார சாரதி பதவிகளின் பொருட்டு தரம் II ற்கு பதவி உயர்த்தப்பட்டு 03 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் சித்தியடைய வேண்டிய வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை **2021.01.09**ம் திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் நடாத்தப்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது. பரீட்சைநடைபெறும் இடம், நேரம் என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்படும்.

**02 தகைமைகள்**

சுகாதார சாரதி பதவியின் தரம் II ற்கு பதவி உயர்த்தப்பட்டு, இது வரையில் இப்பரீட்சையினை பூரணப்படுத்தியிராத உத்தியோகத்தர்கள் மாத்திரம் இப் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும்.

**கவனிக்கவும் : சுகாதார அமைச்சின் செயலாளருடைய 02-90/2015 இலக்கம் உடையதும், 2015.08.12ம் திகதியுடையதுமான பொதுசுற்று நிருபக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு 2012.07.27ம் திகதியன்று சுகாதார சாரதிகள் சேவையில் தரம் II ல் 03 வருடங்களை கடந்துள்ள உத்தியோகத்தர்கள் இந்த வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் இதன் பொருட்டு தோற்ற வேண்டிய அவசியமில்லை.**

**விண்ணப்பம் கிடைக்கப்பெறும் கடைசி தினமான 2020.12.18.ம் திகதியுடன் II ம் வகுப்பிற்கு நியமிக்கப்பட்டு உரிய நியமனக்கடிதம் கிடைக்கப்பெற்றுள்ள உத்தியோகத்தர்களது விண்ணப்பங்களை மாத்திரம் எனக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கவும்.**

385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත, කොළඹ 10. 385,வணக்கத்துக்குரியபத்தேகமவிமலவங்சதேரோமாவத்தை,கொழும்பு 10.
385. Rev. Baddegama Wimalawansa Thero Mawatha. Colombo 10. Sri Lanka.

## 03 விண்ணப்பங்கள்

இச் சுற்று நிருபத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக விண்ணப்பதாரிகளினால் தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தங்களினுடைய திணைக்களத் தலைவரின் ஊடாக பணிப்பாளர் (பரீட்சைகள்), சுகாதார அமைச்சு, "சுவசிரிபாய", இலக்கம் - 385, வண.பத்தேகம விமலவங்சதேரர் மாவத்தை, கொழும்பு - 10 என்னும் முகவரிக்கு **2020.12.18**ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் சரியானவை என பிரிவுத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு இருக்கவேண்டும். தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முகவரியிடப்பட்ட ரூபா.45 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட (9" X 4") அளவுடைய கடித உறை 2 இணையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ, அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் சரியாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள், உரிய மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப அமையாத விண்ணப்பங்களும் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.

**குறிப்பு : விண்ணப்பமானது A4 தாளின் இருபக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும். முதலாவது பக்கத்தில் 01 – 03 வரையான விபரங்களும், இரண்டாவது பக்கத்தில் 04 – 08 வரையான விபரங்களும் உள்ள்க்கப்பட்டிருக்க கூடியவாறும் இருத்தல் வேண்டும். மேற்படி மாதிரிக்கு ஒவ்வாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.**

## 04 பரீட்சைக் கட்டணம்

4.1 முதன் முறையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக் கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு விடயத் திற்கும் ரூபா.25 வீதம் இரத்துச் செய்யப்படாத முத்திரையினை ஒட்டி அதன் மீது தமது கையொப்பத்தினை இட்டு இரத்துச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

4.2 எக் காரணத்தினைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது வேறு பரீட்சைகளின் பொருட்டு மாற்றப்படவோ, அல்லது மீளப் பெறப்படவோ இடமளிக்கப்பட மாட்டாது.

## 05 பரீட்சைக்கான அனுமதி

5.1 ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். அப் பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப் படவில்லையாயின் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

5.2 பரீட்சையின் பொருட்டு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தங்களினது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதன் பொருட்டுகீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை கொண்டு வருதல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை

(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை

(இ) வலுவுள்ள சாரதி அனுமதிப்பத்திரம்

(ஈ) வலுவுள்ள கடவுச் சீட்டு

**06** பரீட்சைதிட்டம்

இந்தப் பரீட்சையானது தாபனவிதிக்கோவை, நிதிப்பிரமாணம் மற்றும் முதலுதவி போன்ற மூன்று பகுதிகளையுடைய ஒரு கட்டுரை வினாத்தாளைக் கொண்ட பரீட்சையாகும். இவ்வினாத்தாளானது தாபனவிதிக்கோவை, நிதிப்பிரமாணம் ஆகியவற்றில் ஒவ்வொரு வினாவினையும் நோயாளர்காவுவண்டி போக்குவரத்து தொடர்பாக வழங்கப்பட்டுள்ள பயிற்சியை அடிப்படையாகக் கொண்ட 05 வினாக்களையும் கொண்ட 07 வினாக்களை கொண்டுள்ளது. தாபனவிதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணம் ஆகிய பகுதிகளுக்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டியதுடன் ஏனைய பகுதியுடன் தொடர்புடைய 05 வினாக்களில் 02 வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க வேண்டும். மொத்த புள்ளிகள் 100 ஆகும். சித்தியடைவதன் பொருட்டு குறைந்தது 40% புள்ளிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.

07. **பரீட்சைப் பாடத் திட்டங்கள்**

**தாபனவிதிக்கோவை, நிதிப்பிரமாணம் மற்றும் முதலுதவி வினாத்தாள்**

தாபனவிதிக்கோவையின் II ம் அத்தியாயம் மற்றும் XLVII அத்தியாயத்தில் 1 - 4 வரை
நிதிப்பிரமாணம் (நி.பி. 102 - 110 வரை)
நோளாயர் காவுவண்டிப் போக்குவரத்து தொடர்பாக வழங்கப்பட்ட பயிற்சியின் அடிப்படையானது.

08. **பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல்**

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09 தயவு செய்து இச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களினை தங்களின் திணைக்களத்தில்/ நிறுவனத்தில் / பிரிவில் / விசேட இயக்கத்தில் கடமையாற்றும் சகல சுகாதார சாரதிச் சேவை உத்தியோகத்தர்களிற்கும் தெரியப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இந்த தகவல்களை www.health.gov.lk எனும் இணையத் தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**கவனிக்கவும் :- சிங்களம், தமிழ், ஆங்கில மொழியிலான சுற்று நிருபங்களிடையே ஏதாவது வேறுபாடுகள் காணப்படுமாயின் சிங்கள மொழிமூல சுற்று நிருபமே வலுவுடையதாகும்.**

ஒப்பம்
யு ஏ எஸ் எச் சிசிர குமார
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) II
செயலாளரின் பொருட்டு
சுகாதார அமைச்சு

**U.A.S. Harshapriya Sisira Kumara**
**Deputy Director General (Administration) 02**
**Ministry of Health**
**"Suwasiripaya"**
**Colombo 10**

**EXO**

அலுவலக உபயோகத்தின் பொருட்டு

மாதிரி விண்ணப்பப் படிவம்

## சுகாதார அமைச்சின் ஆரம்ப தொழிநுட்ப சேவை வகை தரம் II PL - 03 - 2006 (ஏ) சம்பள அளவுக்கு உரித்தான சுகாதார சாரதி பதவிக்கான இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2020(இரண்டாவது தடவை)

**01.** (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில்): ..........................................................

..........................................................................................................................

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் ( ஆங்கில கப்பிற்றல் எழுத்தில்):

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதல் எழுத்துடன் பெயர் : (தமிழில்): ..........................................................................

..........................................................................................................................

(iv) முதல் எழுத்துடன் பெயர் : (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) தரம் II ற்கு நியமிக்கப்பட்ட / உயர்வு பெற்ற கடித இல மற்றும் திகதி:..............................

(ii) 2012.07.27 ம் திகதியன்று தரம் II ல் சேவைக்காலம்:..................................................

(iii) தற்போது பெறும் வருடாந்த சம்பளம்: ..........................................................

(iv) கையடக்கத் தொலைபேசி இலக்கம்:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(v) தேசிய அடையாள அட்டை இலக்கம்:

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

**02.** (அ) தற்போது சேவை புரியும் நிறுவனம்:

(தமிழில்)...........................................................................................

(ஆங்கிலத்தில்)....................................................................................

(ஆ) உரிய மாவட்டம் : ..........................................................................

(இ) இந்த நிறுவனம் நிர்வகிக்கப்படுவது - மத்திய அரசினால் - ☐

மாகாணசபையினால் - ☐

(ஈ) மாகாண சபையாயின் அதற்குரிய மாகாணம் : ..................................................

(உ) பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதன் பொருட்டு தெளிவாக விண்ணப்பதாரியினது முகவரியிடப்பட்ட 9" x 4" அளவு ரூபா.45.00 பெறுமதியுடைய முத்திரை இடப்பட்ட கடித உறை 02 இணைக்கப்பட்டு உள்ளதா? ..........................................................

(ஊ) (i) தபால் முகவரி (தமிழில்): ..........................................................

(ii) தபால் முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்): ..................................

**03.** பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்): ..................................

**04.** (அ) இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா? ……………………………………………………

(ஆ) அவ்வாறு தோற்றியிருந்தால் இந்த தடவை முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா?

| முத்திரைக் கூண்டு |
|---|

**05. விண்ணப்பதாரியின் உறுதியுரை:**

(i) இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் இப் பரீட்சைக்கு நான் முதற்தடவையாக தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றும் / முதற் தடவை அல்லாத படியால் ரூபா……………. பெறுமதியுடைய முத்திரை ஒட்டியுள்ள தாகவும்* இம் முத்திரையானது விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி இரத்துச் செய்வதற்கு முன்னர் பாவிக்கப்படாத பெறுமதியுடைய முத்திரையெனவும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

(ii) சுகாதார அமைச்சு பரீட்சைகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு அமைய செயற்படுவேன் என்றும், இப் பரீட்சை தொடர்பான பிரமாணங்களுக்கு அமைய நான் தகைமையற்றவனாக காணப்பட்டால் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்தவற்கும் இது தொடர்பாக எடுக்கப்படும் எந்த தீர்மானத்திற்கும் இணங்குவேன் என்றும் இத்தால் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திகதி :………………………… ………………………………………

விண்ணப்பதாரியின் கையொப்பம்

**06. தனிநபர் கோவையினை கையாளும் விடய முகாமைத்துவ உதவியாளரின் உறுதியுரை**

இந்த விணணப்பம் விண்ணப்பம் பாரமேற்கப்படும் தினத்திற்கு முன்னர் என்னிடம் கிடைக்கப்பெற்தென்றும், தனிநபர் கோவையில் உள்ள தகவல்களுக்கு அமைய விண்ணப்பதாரி இந்த விண்ணப்பத்தை சரியாக பூரணப்படுத்தியுள்ளதாகவும், இந்த விண்ணப்பத்தில் பிரதி தனிநபர் கோவையில் கோவையிடப்பட்டுள்ளதென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.சூ

திகதி : ………………………………..

பெயர், கையொப்பம்

**07. நிறுவனத் தலைவரின் கையொப்பம்**

திரு/திருமதி/செல்வி/செல்வன்*………………………………………என்பவர்……………………………………

உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் பணிபுரிகின்றார். ஏன்றும் அவ் உத்தியோகத்தர் இப் பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறை / முதன் முறை அல்ல என்பதால்* ரூபா……….. பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும் /முத்திரைகள் ஒட்ட அவசியமில்லை* எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும், எனது முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:………………………….. ………………………………………………

திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)

**08. பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு / விசேட இயக்கத்தலைவரின் உறுதிப்படுத்தல்.**

திரு/திருமதி/செல்வி/செல்வன்* ……………………………………… என்பவர் எனது பிரிவில் /விசேட இயக்கத்தின்* ………………………………… உத்தியோகத்தராக பணியாற்றுகின்றார் என்றும்,விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவைக்கு அமைய சரியானவையென்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரியதகைமைகளினை இவர் பூத்திசெய்துள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:…………………………… ……………………………………………………

பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு/விசேட இயக்கத்
தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்படவேண்டும்)

* - பொருத்தமற்றதை வெட்டிவிடவும்